

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள நீச்சல் குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஆர்.நடேசன் , தியாகராஜன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, நகரச் செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் தங்கவேல், ராஜபாண்டி ராஜவேலு, மாநில சமூக வலைதள பொறுப்பாளர் ரியா, மாவட்ட சார்பு நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கி.கண்ணன் ஏற்பாடு ! வை.ம.அருள்தாசன் தலைமை ! யு.எஸ்.குரளரசன் முன்னிலை !

# திருவொற்றியூர் 6 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ சிறப்புரை!

சென்னை,செப்.14

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி,6வது வட்ட கழக திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் (11.09.2024 புதன்கிழமை) மாலை சாலஞ்சர் பான் குயட் ஹால், நம்.28/8. டாக்டர் கலைஞர் நகர் மெயின் ரோடு, திருவொற்றியூர், செ19ல் நடைபெற்றது.

வட்ட செயலாளர் கி.கண்ணன் கூட்டத்திற்கான ஏற்பாட்டினை செய்திருந்தார். திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் தலைமை வகித்தார்.

என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குரளரசன், ஏ.இந்துமதி, எம்.வஜ்ரவேல், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எஸ்.கணேஷ், ஆர். தினேஷ்குமார், எஸ்.மகேந்திரன், எஸ்.ஆர்.மலைராஜ், ஆர்.மோகனசுந்தரம், எம். கார்த்திக், ஆகியோர் வரவேற்றனர்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ,கே.பி.சங்கர் எம்.எல்.ஏ ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

டி.லோகநாதன்,சேகர் வி.மணிகண்டன், எஸ். ஜானகிராமன், ஆர்.தனசேகர், கே.விஜயகுமார்,எஸ். சேகர் வி.வேதநாயகம், வி. யோகவர்ணன், எஸ். ராஜேஷ், வி.ஏழுமலை, கே.சக்திவேல், கே.முரளி, ஆர்.டேவிட்தர்மராஜ், எல். பிரதீப்குமார், கே.கஜேந்திரன், முரசொலி ஜி.குமரேசன், எ.சம்பத், எம்.லோகநாதன், கே.ஏகாம்பரம், கே.வேணு கோபால், எஸ்.மனோஜ், பி.ஆர்.பாலசுப்பிரமணியம், சி.மஞ்சுளா, ஆர்.ரவி,எஸ். செல்வம், கே.உதயகுமார், எல்.பாலமுருகன், கே.விக்னேஷ், கே.நவின், கே. கவின்ராஜ், எஸ்.சிவா,ஜெ. ஜோசப், கே.சுவின்ராஜ், எஸ்.விக்னேஷ், எஸ்.முருகேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முரசொலி ஜி.குமரேசன் நன்றி கூறினார்.

### மூத்த குடிமக்களுக்கான புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில்

# ஆன்மிகப் பயணம் செப்டம்பர் 21ல் தொடங்குகிறது!

### இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப். 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 15-09-2024 அன்று சென்னை ஓட்டேரி, சேமாத்தம்மன் திருக்கோயிலில் ரூ. 1.58 கோடி மதிப்பீட்டிலான கருங்கல் கட்டுமான திருப்பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்தையால்பேட்டை அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான சீர்மிகு நல்லாட்சியில் இந்து சமய அறநிலைத்துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு இன்று ஒரே நாளில் 101 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெறுகிறது. நாளைய தினம் 26 திருக்கோயில்களில் நடைபெறும் குடமுழுக்கையும் சேர்த்து இதுவரை 2,226 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற இருக்கின்றது.

சென்னை, ஓட்டேரியில் மெட்ரோ இரயில் விரிவாக்கப் பணிக்காக அகற்றப்பட்ட சேமாத்தம்மன் திருக்கோயிலுக்கு, அதற்கு சொந்தமான இடத்தில் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் முன்பிருந்த திருக்கோயிலை விட, பக்தர்களுக்கு தேவையான வசதிகளுடன் புதிதாக கருங்கல் திருக்கோயில் கட்டுவதற்கு திருப்பணிகளை இன்று தொடங்கி வைத்தோம். இந்த ஆட்சி வந்த பிறகு திருக்கோயில்கள் அகற்றப்படுவதாக ஒரு போலியான பிம்பத்தை உருவாக்க முற்படுபவர்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அதேபோல முத்தையால்பேட்டை, அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலுக்கு 2003 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 21 ஆண்டுகளுக்கு பின் இன்றைய தினம் இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. எனது துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இன்று மட்டும் 3 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெறுகிறது. இவை அனைத்தும் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் குடமுழுக்கு நடைபெற்ற திருக்கோயில்களாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, மூத்த குடிமக்கள் மன நிறைவாக கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வகையில் இராமேசுவரம் - காசி, அறுபடை வீடுகள், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களும் ஆன்மிகப் பயணம், மானசரோவர், முக்திநாத் ஆன்மிகப் பயணத்திற்கு அரசு மானியம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டிற்கான புரட்டாசி மாத வைணவ திருக்கோயில்களுக்கான ஆன்மிகப் பயணம் வருகிற செப்டம்பர் 21, 28, அக்டோபர் 5 மற்றும் 12 ஆகிய தேதிகளில் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து தொடங்கப்பட உள்ளது. 1000 மூத்த குடிமக்கள் பங்கேற்கும் இத்திட்டத்திற்காக அரசு ரூ. 25 இலட்சத்தினை அரசு மானியமாக வழங்கியுள்ளது. இறையன்பர்கள் மகிழ்ச்சியோடு இறை தரிசனம் செய்வதற்கு உதவுகின்ற இந்த ஆட்சியை சமய சான்றோர்கள் போற்றுகின்றனர்.

அன்னைத் தமிழில் குடமுழுக்கு நடத்திட வேண்டும் என்பதுதான் இந்து சமய அறநிலையத்துறையின் குறிக்கோளாகும். ஒரேநாளில் எண்ணற்ற குடமுழுக்குகள் நடக்கின்ற போது தமிழில் குடமுழுக்கு நடத்திட நிறைய கட்டமைப்புகள் தேவைப்படுகிறது. அதனை படிப்படியாக துறை செயல்படுத்தி வருகிறது. நேற்றைய தினம் நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி, தமிழிலே குடமுழுக்கு நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இன்றைய தினம் அத்திருக்கோயிலில் தமிழில் குடமுழுக்கு நடத்தப்பட்டது. தமிழிலே குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்ற கோரிக்கை எங்கிருந்து வந்தாலும் அதற்கு தடை இல்லை. எனவே வரும் காலங்களில் அனைத்து திருக்கோயில்களிலும் தமிழில் குடமுழுக்கு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி 152 வது வார்டு தி.மு.க மகளிர் அணி அமைப்பாளர் எஸ்'.பிரேமா சத்தியமூர்த்தி தலைமையில் 152 வது வட்ட தி.மு.க மாமன்ற உறுப்பினர் எஸ்.பாரதி அண்ணாவேலன் கழகக் கொடி ஏற்றி வைத்தார். எஸ்.தமிழரசு அப்பன் இனிப்புகள் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கட்சியின் மூலவர், உற்சவர் அனைத்தும் எங்கள் உயிரினும் மேலான அன்பு தலைவர் தளபதி அவர்கள் தான். ஆட்சியில், அதிகாரத்தில் பங்கு என்பதை பற்றி எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார். இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைப்பது, மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றி தரவேண்டியது போன்றவை தான் எங்களை போன்ற தொண்டர்களின் கடமையாகும். எங்கள் பணி 2026 சட்டமன்ற தேர்தலை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

திருமதி வானதி தப்பித்தேன் பிழைத்தேன் என்று மாவட்டத்திலே தேர்வு செய்யப்பட்டவர். கோவை மண்டலத்தில் இருக்கின்ற தொழிலதிபர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கவில்லை என்றால் இவர்கள் கட்சியின் வேட்பாளர் நாடாளுமன்ற தேர்தலில் எப்படி மண்ணை கவ்வி இருப்பார். ஆதரவு இருந்திருந்தால் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகிருப்பார். கோவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்தில், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அவர்கள் எல்லாம் திராவிட மாடல் ஆட்சியையும், முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாநகராட்சி மன்ற உறுப்பினர் வே. பரிமளம், திருக்கோயில் செயல் அலுவலர் முத்துராஜ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.8.54 கோடி செலவில்

# பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கு புதிய தங்கத்தேர் !

### அமைச்சர்கள் ஆர்.காந்தி - பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

திருவள்ளூர், செப். 17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.8.54 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய தங்கத்தேரின் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு திருக்கோயில்களில் திருப்பணிகள், குடமுழுக்குகள், திருக்குளங்கள் சீரமைப்பு, திருத்தேர்கள் புனரமைப்பு பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகள் செம்மையாக நடைபெற்று வருகின்றன. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஏற்கனவே 68 தங்கத்தேர்களும், 55 வெள்ளி ரத திருத்தேர்களும் உள்ளன. அவற்றில் 12 திருக்கோயில்களில் தங்கத்தேர் மற்றும் வெள்ளித் தேர்கள் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்த இயலாதிருந்த சூழ்நிலையில் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பின், 11 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 9 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சேலம்,கோட்டை மாரியம்மன் தங்கத்தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர் போன்றவற்றை பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் உலா வரச் செய்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் ஓடாமல் இருந்த திருவாரூர் ஆழித்தேரை ஓட்டினார். சிவகங்கை மாவட்டத்தில் சமூகப் பிரச்சினையால் 18 ஆண்டு காலம் ஓடாமல் நிறுத்தப்பட்டிருந்த கண்டதேவி திருக்கோயில் தேரோட்டத்தினை இரண்டு சமூகத்தினரை ஒற்றுமைப்படுத்தி ஓட்டிய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சாரும். அந்த வகையில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புதிதாக 5 திருக்கோயில்களுக்கு தங்கத் தேர்களும், 9 திருக்கோயில்களுக்கு வெள்ளித் தேர்களும் செய்திட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோயிலுக்கு ரூபாய் 8.54 கோடி மதிப்பீட்டில் 11.5 அடி உயரம், 5 அடி அகலம், 6.5 அடி நீளம் கொண்ட புதிய தங்கத்தேர் செய்யப்பட்டு இன்று வெள்ளோட்டம் விடப்பட்டு பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்த ஒப்படைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கடி சொல்வதைப் போல், "சொல்வதை செய்கின்ற அரசாக, செய்வதை தான் சொல்கின்ற அரசாக இந்த அரசு திகழ்கிறது என்பதற்கு இந்த தங்கத்தேர் ஓர் எடுத்துக்காட்டாகும்.

புரசைவாக்கம் கங்காதேஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர் ஆஞ்சநேயர் திருக்கோயில், இலஞ்சி இளஞ்சிகுமாரர் திருக்கோயில், உக்கடம் நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் புதிய தங்கத்தேர்கள் மிக விரைவில் பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். அதேபோல அறிவிக்கப்பட்ட ஒன்பது புதிய வெள்ளித் தேர்களில் திருத்தணி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஏற்கனவே பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது ஏனைய 8 புதிய வெள்ளித் தேர்வுகளும் வரும் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

திருப்பணிகள், குடமுழுக்குகள் என்றாலே இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் காலம் நினைவுக்கு வருவதைப் போல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி காலமும் திருப்பணிகளுக்கும், குடமுழுக்குகளுக்கும் பொற்காலமாக திகழ்ந்து வருகின்றது. அதனை நிரூபிக்கின்ற வகையில் வரலாற்றுச் சாதனையாக இதுவரை 2,098 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, நாளை தினம் மட்டும் 101 திருக்கோயில்களக்கு குடமுழுக்கு நடைபெற உள்ளது.

இந்த பணிகள் தொடரும். இப்பணிகளால் சமய சான்றோர்கள் மற்றும் இறையன்பர்கள் போற்றுகின்ற ஆன்மிக ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன், ஆ. கிருஷ்ணசாமி, துரை. சந்திரசேகர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி ஜி.உமாமகேஸ்வரி, இணை ஆணையர்கள் ச.லட்சுமணன், திருமதி கோ.செ. மங்கையர்க்கரசி, திருமதி இரா.வான்மதி, சி.குமரதுரை, துணை ஆணையர் திருமதி கே.சித்ராதேவி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் அஞ்சன் லோகமித்ரா, செயல் அலுவலர் து.ரு.பிரகாஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில்

# சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

### சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா தலைமையில்!

சென்னை,செப்.17-

செப்டம்பர் 17 ஆம் நாள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு, நேற்று (16.9.24) மேயர் திருமதி ஆர்.பிரியா ரிப்பன் கட்டட அலுவலக வளாகத்தில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதனைத்தொடர்ந்து, அரசு உத்தரவின்படி, மேயர் அவர்களின், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் சமூகநீதி நாள் உறுதி மொழியினை ஏற்றனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு. மகேஷ் குமார் அவர்கள், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந.இராமலிங்கம் அவர்கள், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி எழும்பூர் தெற்கு பகுதி 58 அ வட்டம் திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 58 வது வட்ட கழக செயலாளர் வி. விஜயகுமார் தலைமையில் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. எஸ்.எம். நாதன் , பொதுக்குழு உறுப்பினர் நிர்மலா தேவி, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ரீதர், பகுதி அவை தலைவர் எஸ்.ரசூல், பகுதி துணைச் செயலாளர் டி.வி. வேலு, அன்னபூரணி, பொருளாளர் ஜெகதீசன், மாவட்ட பிரதிநிதி நித்தியராஜ், தன இளங்கோ, வட்டக் கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், பாபு சேகர் , நசீமா பேகம் ,மாறன், அறிவுநிதி ,பிச்சைமுத்து ,முரளிகுமார், ரைமான் டிக் கிரோஸ் ,மாவட்ட துணை அமைப்பாளர் ,முத்து ,ஜெ.கார்த்திகேயன் பகுதி துணை அமைப்பாளர் லியோ மகளிர் அணி துணை அமைப்பாளர் தீபா ,மஸ்லீனா, பூங்குழலி, ப.ராணி , சரண்குமார் ,சூர்யா, முரளி , மூத்த முன்னோடிகள் மற்றும் BLA2 BLC நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.....